# படை முகாம்களில் இரகசியமாக பலர் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு—கிழக்குப் பகுதிகளிலுள்ள சிறிலங்கா படையினரின் தடுப்பு முகாம்களில் பல இளைஞர்களும் யுவதிகளும் இரகசியமான முறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் இரகசிய நிலஅறைகளிலும் மனித நடமாட்டமற்ற பகுதிகளிலும் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தடுப்பு முகாம்களிலுள்ள கைதிகள் மிக கொடுமையாக சித்திரவதை செய்யப்படுவதுடன் உளரீதியான பல அழுத்தங்களும் வழங்கப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 22 இதழ் 366
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 5-2-1995

## வடபகுதிக்கு டாக்டர்கள் ஐ. நா. அனுப்பிவைப்பு

(கொழும்பு)

வடபகுதியில் கடமையாற்றுவதற்கு ஐக்கியநாடுகள் சபை வெளிநாட்டு வைத்தியர் குழுவை அனுப்பவுள்ளதாக உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதி டாக்டர் பீற்றா சிற்சியற் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,—

6 தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த டாக்டர்கள் வடபகுதியில் கடமையாற்றுவதற்கு அனுப்பிவைக்கப்படுவர் என்றும் இதற்கான தொழில்நுட்ப உதவி உலக

(4-ம் பக்கம் பார்க்க)

# போரினால் ஒருநிமிடத்திற்கு 41,000ரூபா செலவு:

# ஒரு வருடகாலத்திற்குள்

# இனப்பிரச்னைக்கு நிரந்தரத்தீர்வு

## சுதந்திரதினத்தில் ஜனாதிபதி உறுதிமொழி

[கொழும்பு]

ஒரு வருடத்தில் இனப் பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி சந்திரிக்கா நேற்று சுதந்திர தினத்தையொட்டி மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார். நேற்றுக் காலை சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற சுதந்திரதின வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறுகூறினார்.



அடுத்த ஆண்டு அரசு 48 வது சுதந்திர தினத்தை கொண்டாடும் போது யுத்தத்திற்கும் இனப்பிரச்னைக்கும் தீர்வு காணப்பட்டுவிடும் என்றும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார். அவர் மேலும் அங்கு கூறியதாவது;

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபடும்போது பல இடையூறுகளை சந்திக்க வேண்டி வரும்.

சமாதானத்துக்கான பாதை மிககஸ்டமானதாகும். ஆனால் இதைத்தவிர வேறு ஒருவழியும் கிடையாது.

வடக்கு கிழக்கு யுத்தத்துக்கு சமரச தீர்வு ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதே தமது உறுதிப்பாடு என்றும் அவர் தெரிவித்தார்,

(4ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னைக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும்

(கொழும்பு)

இலங்கையின் அரசாங்கங்கள் தான் இனப்பிரச்னையை இவ்வாறு வளர்த்ததற்கான பொறுப்பை ஏற்கவேண்டும் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் முஸ்லிம்கள் தமது இன அடையாளங்கள் அங்கீகரிக்கப்படும் ஒரு அரசியல் செயல் திட்டத்தையே எதிர்பார்க்கிறார்கள். அவர்களது சொந்த உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. —ரி

## இனப்பிரச்னை தீர்வு பின்னணியில் பிரதமர் 'ராவ்' செயல்படுகிறார்!

(நியூயோர்க்)

இலங்கை இனப் பிரச்னை தீர்வின் பின்னணியில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் செயற்படுவதாக நியூயோர்க் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை உயர் அமைச்சரவை மட்டத்தில் உள்ள ஒருவரை மேற்கோள் காட்டி அச்செய்திகள் மேற்கண்டவாறு தெரிவித்தன.

ஆயினும் இலங்கை விவகாரம் தொடர்பாக இந்தியப் பிரதமர் உறுதியான செயற்பாட்டைக் கொண்டிருக்கவில்லையென்றும் நழுவல் போக்கையே கடைப்பிடிப்பதாகவும் ஏற்கனவே செய்திகள் வெளியிடப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் இலங்கையில்

(4ம் பக்கம் பார்க்க)

இன்று யாழ். வரும் கண்காணிப்புக்குழுவினர்

## போர் இடைநிறுத்தம்குறித்து புலிகளுடன் ஆராய்வர்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு—கிழக்குப் பகுதிகளில் போர் இடைநிறுத்தத்தை கண்காணிக்கும் குழுக்களின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் இன்று காலை பத்து மணியளவில் ஹெலிகொப்டர் மூலம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இக்குழுவினர் போர் இடைநிறுத்தம் தொடர்பாகவும், போர் இடைநிறுத்தத்தை கண்காணிக்கும் நடைமுறை தொடர்பாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க பிரதிநிதிகளுடன் விரிவாக ஆராய்வார்கள்.

கடந்த மாதம் 8-ந் திகதி விடுதலைப்புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் போர் இடைநிறுத்தம் ஏற்பட்ட பின்னர் முதற் தடவை

(4ம் பக்கம் பார்க்க)

## தொண்டா கருத்துக்கு த. வி. கூட்டணி கண்டனம்

(கொழும்பு)

தந்தை செல்வாவுக்குப் பின் தமிழ்க் கட்சிகளின் போக்கில் மாற்றம் இருப்பதாகவும், அதுவே தமிழ்மக்களின் சாபக்கேடு என அமைச்சர் தொண்டமான் தெரிவித்த கருத்துக்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் மீதும், அவரின் கொள்கைகள் மீதும் சகல தமிழ் கட்சிகளும் நம்பிக்கை வைத்தே இயங்குகின்றன என்ற தொண்டாவின் கருத்தைக் கண்டித்து த. வி. கூ. அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. -ரி

## இன்றைய சந்திப்பின் பின் நான்காம் கட்ட பேச்சுக்கள்?

(கொழும்பு)

மோதல் தவிர்ப்பை கண்காணிக்கும் வெளிநாட்டுக் குழுவுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இன்று நடைபெறும் சந்திப்பைத் தொடர்ந்து அரசு—புலிகளுக்கிடையிலான நாலாம் கட்டப் பேச்சுக்கள் நடைபெறுமென செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு கண்காணிப்புக் குழுவினரை சந்திக்கும் விடுதலைப்புலிகள் மோதல்தவிர்ப்பு உடன்பாட்டில் தாங்கள் எதிர்நோக்கும் பல பிரச்னைகள் குறித்து அவர்களுக்கு விளக்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து தடங்கல்

(4ம் பக்கம் பார்க்க

## தப்பியோடிய சிப்பாய் வீட்டில் ஆயுதம் மீட்பு

[கொழும்பு]

இராணுவ முகாமில் இருந்து கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு தப்பிச்சென்ற இராணுவ வீரர் ஒருவரின் வீட்டில் பல ஆயுதங்களை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இவருடைய வீட்டிலிருந்து மூன்று ரக துப்பாக்கிகளை பொலிசார் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தப்பியோடிய பல இராணுவத்தினர் வீடுகளில் ஆயுதங்கள் வெடிமருந்துகள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவற்றைக்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### இலவச வகுப்பு

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் புதிய இலவசசோதிட வகுப்பு ஞாயிறன்று மாலை ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் ஆரம்பமாகும். அனுமதி இலவசம். (சி- 1389)

### A/L கணிதம்

தூய. பிரயோக கணிதம் ஆரம்பத்திலிருந்து விசேடமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர் 85. மணல்தறைலேன் திருநெல்வேலி. (சி-1386)

### ஜோஸ்யர் மலர்

திருமண தாமதம், குடும்பமே சுமை, திருமண யோகத்தின் திருவிளையாடல்: படித்தவர்கள் பாராட்டுகிறார்கள், விற்பனையில் முன்னணியில்: கிடைக்குமிடத்தில் வாங்கிக்கொள்ளுங்கள் விலை ஆறு ரூபாய். (சி-1390)

### விற்பனைக்கு

மரக்கறி எண்ணை வெற்றுரின்கள்' எண்ணைக் கான்கள், எண்ணை பரல்கள், மைரின்கள், வெற்றுச் சாக்குகள், உரபாய்க்குகள், பழைய பத்திரிகை நீம் சழிவு ஆகியன விற்பனைக்கு உண்டு. ஈழநாடு காரியாலயம், யாழ்ப்பாணம். (ஏ-4770)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு சுத்தமாக்கியும் தரப்படும். தொடர்பு மருதம் கோழிப்பண்ணை, பலாலி வீதி. திருநெல்வேலி. (ஏ-4765)


## 25-3-1995 வரை செவ்வாய் வக்கிரம்

அரசுத்தலைவிகள் சந்திரிகா ஸ்ரீமாவோ' ஜெயலலிதா ஜெனனகால ஜாதகங்கள் (உட்பட) புத்தாண்டுபலன்கள் ரூபா 10/ எங்கும விற்பனையாகின்றன. நூலாசிரியர் சத்யா (கட்டுடை) (சி-1391)

## நெல் அறுவடை ஆரம்பம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள நெடுங்குளம் அரியாலை, கோயிலாக்கண்டி, தனங்கிழப்பு, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் தற்போது நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. -154

## உற்சவம்

(அரியாலை)

யாழ். கந்தர்மடம் அரசடி வீதி செல்வநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 12ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6,00 மணிக்கு தீமிதிப்புஉற்சவமும் அபிஷேகமும் நடைபெறவுள்ளது.—59

## லியோ கழக ஆரம்பம்

[அரியாலை[

உடுவில் மகளிர் கல்லூரியில் புதிதாக லியோ கழகம் ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்லூரி அதிபர் செல்வி செல்லையாவின் பணிப்புரைக்கமைய மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் இச்கல்லூரியில் லியோ கழகத்தை ஆரம்பித்துவைத்தது லயன் எஸ். எஸ். தியாகராசா அங்குராாப்பணம் செய்துவைத்தார். 59

# கப்பல்கட்டணத்தை குறைக்ககோரிக்கை

]கொழும்புத்துறை]

யாழ். மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவு சமாசம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருள்களைக் கப்பலில் தருவிப்பதற்குவசதியாகபொருள்களுக்கான கப்பல் கட்டணத்தைக் குறைத்து தருமாறு யாழ். அரச அதிபர் கே. பொன்னம்பலத்தை கோரியுள்ளது.

கப்பல் சட்டணத்தைக் குறைப்பதன் மூலம் பொருள்களைக் குறைந்த விலையில் விற்க முடியும் என சமாசம் யாழ். அரச அதிபருக்கு விபரமக தெரிவித்துள்ளது.

-154 சி

# கிழக்கு பல்கலைமாணவரின் போராட்டம் வெற்றி

[கொழும்பு]

கிழக்குப் பலகலைக் கழக கலை, வர்த்தக மாணவர்கள் மேற்கொண்ட போராட்டம் ஒன்று வெற்றியளித்துள்ளது

இதன்படி கலை, வர்த்தக பீடங்களை வந்தாறு மூலைக்கு மாற்ற பல்கலைக் கழக நிர்வாகம் முடிவுசெய்துள்ளது. நாளை திங்கட்கிழமை முதல் இந்தப் பீடங்கள் மாற்றப் படும்.

கடந்தபல வருடங்களாக மட்டக்களப்பு நகரிலேயே இயங்கிவந்த கலை வர்த்தக பீடங்கள் இரண்டும் நாளை திங்கள் முதல் வந்தாறுமூலையிலுள்ள பல்கலைக் கழக கட்டடத்தில் இங்குமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. -இ-சி

# தடா சட்டத்தை நீடிக்கவேண்டாம்

(புதுடில்லி)

இந்தியா முழுவதும் மே மாதம் காலாவதியாகும் தடாச் சட்டத்தின் அமுலாக்கத்தை நீடிக்கவேண்டாம் என்று உத்தரப் பிரதேஷ் முதலமைச்சர் முலாயன்சிங் யாதவ் மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக உள்துறை அமைச்சர் எஸ். பி. சவானுக்கு இவர் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான தடாச் சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்று தமது கடிதத்தில் திரு. முலாயன்சிங் யாதவ் குறிப்பிட்டுள்ளார்.

கே-சி

# தொழிற் பயிற்சிநெறி வர்த்தமானி பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய கல்வியியலான தொழிற்பயிற்சிநெறி ஒன்றை பின்பற்றுவதற்காக கல்விக் கல்லூரிகளுக்குஅனுமதிப்பதற்கான விபரங்கள் அடங்கிய 1995 ஜனவரி 13ம் திகதிய வர்த்தமானி வலயம் 1 கல்வித் திணைக்களத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு எதிர்வரும் 10ம் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

முறையாகப் பூரணப்படுத்திய விண்ணப்பங்களை யாழ். வலயம் 1, கல்வித் திணைக்களத்தில் நேரடியாக நாளை 6-ம் திகதி பி. ப. 4-00 மணிக்கு முன்பதாகக் கையளித்தால் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட திகதிக்கு முன் அனுப்பி வைக்க முடியும்.

யாழ். வலயம் 1 கல்வித் திணைக்களத்திற்கு கடித மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் நாளை 6-ம் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்களும் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி இவ்வாறு தெரிவித்துள்ளார். -ரி


THILEEPAN RESEARCH FELLOWSHIP FOR BIOTECHNOLOGY

Graduates/Postgraduates are requested to apply for the above fellowship giving their biodata and research proposal in Biotechnology. The fellowship will be awarded to the most suitable applicant after an interview. A monthly allowance of Rs 2500/- shall be paid.

The duration for this fellowship shall be one year and could be extended by re-applying for the fellowship. The fellowship may be terminated at any time if the project is not proceeding satisfactorily or the applicants conduct is unsatisfactory.

Closing Date will be;

1995 - 03 - 01

REGISTRAR

UNIVERSITY OF JAFFNA

1995 - 02 - 03

(A-4769)


யாழ். பஸ் நிலையம் — கொழும்புத்துறை

# பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையினால் இடைநிறுத்தப்பட்ட யாழ். பஸ்நிலையம் - கொழும்புத்துறை பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு, பாசையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்றச் சனசமூக நிலையத்தினர் சிற்றூர்திப் போக்குவரத்துப் பகுதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறிப்பிட்ட பஸ் சேவை இல்லாததால், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்று மேலும் தமது வேண்டுகோளில் தெரிவித்துள்ளனர், -ம

# பர்ச்சார்த்த பழமரச் செய்கை

(யாழ்ப்பாணம்)

மணல் வெளியாகக் காணப்படும் மணற்காட்டுப் பிரதேசத்தினைச் சோலையாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சூழல் பாதுகாப்பு நிறுவனம், பர்ச்சார்த்தமாகப் பயன்தரு பழமரக் கன்றுகளை நடுகை செய்து பராமரித்து வருகின்றது.

கடந்த வருட இறுதியில் 200 ஏக்கரில் சவுக்கும், 40 ஏக்கரில் தென்னையும் நடுகை செய்த முடிவில் இப்பழமரக் கன்றுகளை நடுகை செய்துள்ளனர். அங்கு மா, பலா, தேசி, தோடை, மாதுளை, கிட்டு பப்பாசி ஆகிய பழமரங்கள் நடுகை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. -சி

## மனித உரிமை விவகாரம்:

# இலங்கை அரசுக்கு அமெரிக்காபாராட்டு

[கொழும்பு]

இலங்கையில் மனித உரிமை மீறல்களை தடுப்பதற்கு தீர்க்கமான நடவடிக்கைகள் எடுத்தமைககாக அமெரிக்க அரசு பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை பாராட்டியுள்ளது.

கடந்தசில ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில்; தற்போது இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் குறிப்பிட்டஅளவு முன்னேற்றம் கண்டுள்ளதாக அமெரிக்கா கவனத்தில் எடுத்துள்ளது.

கடந்த ஆண்டு பாதுகாப்புப் படையினர் ஒருசில மனித உரிமை மீறல்களையே புரிந்துள்ளனர் என்றும் மனித உரிமை சம்பந்தமான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அரசியற் படுகொலைகளும் காணமற்போன சம்பவங்களும் பெரும்பாலும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

வாஷிங்டனில் நடைபெற்ற உலக மனித உரிமைகள் பற்றிய வருடாந்த மகாநாட்டிலேயே இலங்கை பற்றி மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது, ம

## நொத்தாரிஸ் பிணைப் பத்திரம் புதுப்பித்தல்

(அரியாலை)

காப்புறுதிக் கூட்டுத்சாபனத்தின் யாழ். பிராந்தியக் கிளையில் நொத்தாரிஸ் பிணைப் பத்திரம் புதுப்பித்தலுக்கான கட்டணம் இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து 28ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. -72

## நெல் அறுவடை பாதிப்பு

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது பெய்துவரும் மழையினால், விளைந்துள்ள நெல்லை அறுவடை செய்யமுடியாமல் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர், சில இடங்களில் வெள்ளத்தில் நெற்கதிர்கள் விழுந்து முளைத்துள்ளதாகவும் நெல் அழிவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.-59

## 2000 பயிலுநர்களுக்கு பயிற்சி

[கொழும்புத்துறை[

தேசிய தொழில் பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை அடுத்த வருடம் 2,000 பயிலுனர்களைப் பயிற்சிகளில் ஈடுபடுத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதக்கான சகல நடவடிக்கைகளையும் தேசிய பயிலுனர் சபைதற்போது மேற்கொண்டு வருவதாக தேசிய தொழில் பயிலுனர் கைத் தொழில் பயிற்சி அதிகாரசபை தொழில் பயிற்சிமுகாமையாளர் [வடக்கு கிழக்கு] திரு. ம. சிவயோகசுந்தரம் தெரிவித்துள்ளார். 154

## வருடாந்த பொதுக்கூட்டம்

[கொழும்பு]

அரசாங்க மருந்து கலவையாளர்கள்[டிஸ்ப்பென்சர்கள்] சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 7ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கொழும்பு-7 பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சுகாதார அமைச்சர் ஜனுப் பௌசி பிரதம அதிதியாக கலந்துகொள்வார். பிரதி சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார். ]72]

## குளம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலால் சிதைவடைந்திருந்த தென்மராட்சிப் பகுதியில் அமைந்துள்ள பளை ஆரத்திக்குளம் தேச நிர்மாணிகளால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இப்பணியில் சிதைவடைந்திருந்த இக்குளத்தின் உடைந்த கற்கள், மண் ஆகியன போடப்பட்டுப் பலப்படுத்தப்பட்டதோடு அணைக் கட்டுகளும் வலுவூட்டப்பட்டன.

### மணிவாக்கு

மனச்சான்று பற்றித் தனித்திருந்து உணராதவன், மனச்சான்று என்ன என்பதை அறியான். —ஜோசெப்ருக்

## நமது நோக்கு

### தாயகச் சிந்தனை!

தமிழர் தாயகத்தை அங்கீகரித்து, தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும்என ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டுக்குத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் —ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை இனப் பிரச்னை பற்றி ஓர் அறிக்கையை வெளியிட்டது.

தற்போது —அமெரிக்காவில் —கலிபோர்னியாவில் செயற்படும் மனிதாபிமானச் சட்ட நிறுவனம் இக்கோரிக்கையைச் சர்வதேச நிறுவனத்திற்குச் சமர்ப்பித்துள்ளது.

இனப் பிரச்னைத் தீர்வுக்குப் பழைய தீர்வுகளான பண்டா-செல்வா ஒப்பந்தம், இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஆகியனவற்றைத் தூக்கிப் பிடிப்பதால் எவ்வித நன்மையும் விளையப்போவதில்லை.

ஏனெனில் —அவை ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டுள்ளது.

'தமிழ் ஈழம்' என்ற கோரிக்கையை முன் வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் ஏற்பட்டது?

இது பற்றிச் சர்வதேசச் சமூகங்கள் உணரத் தலைப்பட்டது நல்ல சகுனமே!

ஏனெனில் —முன்பெல்லாம் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றித் தெரிவிக்கப்பட்டபோதெல்லாம், அவற்றை முற்றாக நம்ப மறுத்தன.

இங்கு நேரில் வந்து விசாரித்துப் போக வாய்ப்புக்கள், வசதிகள் வழங்கப்படவில்லை.

ஆனால் —எதிர்க் கட்சியாக இருந்த சுதந்திரக் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் தேர்தலுக்காகச் செய்த பிரசாரத்தின் பக்க விளைவுகளில் ஒன்று, மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வே.

முன்பு —சர்வதேச மாநாடுகளில் மனித உரிமை மீறல்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டபோதெல்லாம், அரசு தனது நடவடிக்கைகளால் அவற்றைச் சமாளித்து வந்தது.

ஆனால் —எல்லோரையும் எக்காலத்தும் ஏமாற்ற முடியாதல்லவா?

இன்று —சர்வதேச மட்டத்தில் உண்மை நிலை தெரியவருகிறது; அறிக்கைகள், தீர்மானங்கள், ஆலோசனைகள் வருகின்றன.

ஏற்கனவே அமெரிக்க உதவிகள் குறைக்கப்படுவதால், பொருளாதாரச் சிக்கலைச் சந்திக்கும் அரசு, மேலும் நிதி உதவிகளை இழக்க விரும்பாது.

நீதியான ஆலோசனைகளைக் கேட்டு நடக்க வேண்டியதைத் தவிர வேறு வழி இல்லை.

## தீவகப்பகுதிகளிலிருந்து — காணமல் போனோர் பற்றிய விபரங்களை உடன் சமர்ப்பிக்கவும்

[கொழும்புத்துறை]

இராணுவ நடவடிக்கைகளால் தீவகத்திலிருந்து காணமல்போனவர்களின் முழுவிபரங்களையும் வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பணிமனைகளில் நேரில் சென்று பெயர் விபரங்களை ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

காணமற் போனவர்களின் விபரங்கள் யாவும் வடக்கு கிழக்கு மாகாண சபையின் விசாரணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கக்கூடியதாக எதிர் வரும் 15ம் திகதி புதன்கிழமைக்கு முன் அனுப்பி வைக்குமாறு வேலணை, ஊர்காவற்றுறைகளின் பிரதேச செயலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்விண்ணப்பப்படிவங்கள் தேவையானோர் அந்தந்தப் பிரதேச செயலகங்களில் நேரில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. 154

## கலைப்படைப்புகளுடன் எமக்கு ஒருவரலாற்று தொடர்புள்ளது

### — புதுவை உரை

[யாழ்ப்பாணம்]

எமது கலைப்படைப்புக்கும் எமக்குமிடையில் ஒரு வரலாற்றுத் தொடர்பு இருக்கிறது. அனைத்துக் கலைகளும் சமூகத்தின் தேவைகருதியே தோற்றம் கொள்கின்றன. தனி மனித விருப்பு வெறுப்புகளையும் வெறுமனே மனம் மகிழ்வதற்கான அம்சங்களையும்கொண்ட எந்தஅரங்க ஆற்றுகையும் காலத்தை வென்று நிலைத்திருக்கமாட்டாது.

நல்லூர் இளம்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி தமிழ்ச்செல்வி கணபதிப்பிள்ளையின் பரதநாட்டிய அரங்கேற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகப்பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: ஒரு அரங்கின் வெற்றி அக்கலைப்படைப்புத் தரும் கருத்தின் சமூகத் தேவையின் அவசியத்திலிருந்தே தீர்மானிக்கப்படும். பரதக்கலை இதற்கு விதிவிலக்கில்லை. இங்கு பரதநாட்டியம் புதிய திசையில், புதிய உருவில், புதிய கருத்துக்களுடன் புலரத் தொடங்கிவிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் தமதுரையில்: நமது கலாசாரத்தின் சிறப்பான முத்திரைகளில் ஒன்று பரதநாட்டியமாகும். இதில் சமயம் உண்டு, தத்துவம் உண்டு, கலை உண்டு. இத்தகைய சிறப்பு வாய்ந்த கலையைப் பயின்று பேணுபவர்கள் நம்மால் என்றும் கௌரவிக்கப்படவேண்டியவர்களாவர். இந்த வரிசையில் பாரதி கலாமன்ற இயக்குனர் திருமதி ஞானமணி செல்லையாவும் அவர்களிடம் இக்கலையைப் பயின்று தேர்ச்சி பெற்று தாம் பயின்ற கலையை அரங்கேற்றம்செய்யும் செல்வி தமிழ்ச்செல்வி கணபதிப்பிள்ளையும் போற்றப்பட வேண்டியவராவர். இவருடைய கலை ஆர்வம் மேலும் வளர்ச்சிபெறவேண்டும் என்றும் தெரிவித்தார், 162

## மீன்பிடி உபகரணங்களுக்கு இறக்குமதி தீர்வை நீக்கம்

(கொழும்பு)

மீன்பிடி உபகரணங்களுக்கு இறக்குமதி தீர்வையிலிருந்தும் வியாபார மொத்த விற்பனவு வரியிலிருந்தும் விலக்களிக்கப்படவுள்ளதாக கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் இந்திகா குணவர்த்தன தெரிவித்துள்ளார். இதுசம்பந்தமான திட்டம் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மீன்பிடிவலைகளுக்கான நூல் மீது அறவிடப்பட்டு வந்த மொத்த விற்பனவுவரியும்நீக்கப்பட்டுள்ளது ருவைன் நூலுக்கான இறக்குமதித் தீர்வை 20 வீதத்திலிருந்து 10 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. [க-சி]

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-02–05

ஞாயிறு இரவு

08-01 இசையரங்கம்-நிகழ்ச்சியில் நாதஸ்வரக் கலைஞர் திரு. மு. பிறேமானந்அவர்களின் நாதஸ்வரக் கச்சேரி.
08-30 செய்திகள்
08-40 தாயகப் பாடல்கள்
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

1995-02–06 திங்கள்

காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின்தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–02-05

ஞாயிறு மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிக் கீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 கதம்பம்
06-00 சிந்தனைக்கு சில விஞடிகள்.
06-02 உங்கள் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## புலதும் பத்தும்

### சிறுநீரகம்

''பெங்களூரில்... ஆயிரம் பேரின் சிறுநீரகங்களைத் திருடி, மத்திய கிழக்கிற்கு ஏற்றுமதி செய்தார்கள்!'' —இது செய்தி.

இந்தச் சிறுநீரகத்தின் தொழில் என்ன? உடலில் உள்ள கழிவுப் பொருட்களையும், நச்சுப் பொருட்களையும் வடிகட்டிச் சிறுநீருடன் வெளியேற்றுவதே! பிரித்தெடுக்கப்படும் நச்சுப் பொருட்கள் படிந்து கற்கள் உண்டாகும், இதனால் பல தொல்லைகள்.

நவீன முறைப்படி... கதிர்அதிர்வு அலைச் சிகிச்சை மூலம் இந்தக் கற்களை உடைத்துத் தூளாக்கி அகற்றுகிறார்களாம். வலியற்ற இச் சிகிச்சை பலன் அளிக்காவிடில்...? அறுவைச் சிகிச்சைதான்!

சிறுநீரகத்தைக் களவு கொடுத்தவர்களுக்கு... இனிமேல் - இந்தக 'கற்கள்' பிரச்னை இருக்காது என அனுதாபத்துடன் கூறுகிறார் எமது வாசகர் ஒருவர்.

— மயூரன்

## இராசி பலன்

05–02–1995

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு தை 22)

ஷஷ்டி: வைகறை5.36வரை ரேவதி: முன்னிரவு 8 00 வரைஅமிர்தயோகம் ஷஷ்டி விரதம் இராகுகாலம் மாலை 5 05 முதல் 6 35 வரை சுப நேரம் காலை 9.35 முதல் 11.05 வரை.

மேடம்: பயனற்ற பேச்சு, மனக்குறை. வாய்த்தர்க்கம்,

இடபம்- காரிய பலிதம், தானதர்மம். பயணம்.

மிதுனம்; எதிர்பாராத நன்மை, கல்மனம், பணவரவு.

கடகம்: பண்பு தவறுதல், இனசனபகை, முயற்சி தடை.

சிங்கம்: கடினவாக்கு, மனசஞ்சலம்; அமைதிகுன்றல்.

கன்னி: வாக்குவன்மை, நண்பர் உதவி, பொதுப் பணி.

துலாம்; சயனசுகம்: வருவாய் அதிகரிப்பு, தெய்வீக செலவு.

விருச்சிகம்: மனக்குறை, சகோதர வெறுப்பு, தனிமைப் படல்.

தனுசு; குடும்ப விவகாரம், தாயார் துன்பம், அலைச்சல்.

மகரம்; மனைச்சிறப்பு, பொதுசன மதிப்பு, நற்செய்தி

கும்பம்: அடிமை நிலை, உறவினர் குறை, ஏமாற்றப் படல்.

மீனம்: நினைத்ததைச் சாதித்தல், மனச்சந்தோசம், வெகுமதி.

ஜோஸ்யர்

## இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகர விநாயக ஆலயத்தின் வருடாந்த 108 சங்காபிஷேகம் இன்று 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும். (154)

0 0 0

(நெல்லியடி)

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிழக்கு மாகாணம் போன்ற சுகாதார சேவைத் திணைக்கள ஊழியர்களுக்கிடையேயான மாணவதாதிப் பயிற்சி பரீட்சை இன்று 5ம் திகதி யாழ். தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (160)

* 0 *

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் புதிய இலவச சோதிட வகுப்புக்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்று மணிக்கு ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகும். இவ்வகுப்புக்களில் இக்கலையை கற்க ஆர்வமுள்ளவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். வகுப்புக்களைத் தொடர்ந்து ஆய்வரங்கில் ப. கனகலிங்கமும், பி இரத்தினசேகரும் ஆய்வுரை வழங்குவார்கள்,

-எஸ்

0 0 0

(யாழ்ப்பாணம்)

தச்சன்காடு மினிமுகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த 36, மாவீரர்களின் நினைவு வீரவணக்கக் கூட்டம் இன்று ஞாயிறு இரவு 8 மணிக்கு கெருடாவில் 36 வீரவேங்கைகள் நினைவு பாலர் பாடசாலை முன்றலில் தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு வெற்றிச்செல்வன் தலைமையில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கம் நடாத்தும் திருமந்திர விழா இன்று ஞாயிற்றுக்கிழமை சங்கத்தானையிலுள்ள சங்க மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் நடைபெறும்.

0 0 0

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி நூற்றுண்டுவிழாச் சபை செயற்குழுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபரும் விழாக்குழுத் தலைவருமான திரு. நா. ஜெயநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (139)

0 0 0

(கொழும்புத்துறை)

பாண்டியன்தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் ஆலய அலங்காரத் திருவிழாக் காலங்களில் கம்பராமாயணத் தொடர் சொற்பொழிவாற்றிய பிரம்மஸ்ரீ சிவ. வை, நித்தியானந்த சர்மாவுக்கு பாராட்டு விழா இன்று ஞாயிறு மாலை 7 மணிக்கு இளைப்பாறிய அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் நடைபெறும். ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ பா. வசந்த சர்மா பாராட்டுரை நிகழ்த்துவார். (154)

0 0 0

[யாழ்ப்பாணம்]

பண்டிதர் க. சச்சிதானந்தன் 'இயங்கு தமிழ்' என்னும் பொருளில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ், தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் உரை நிகழ்த்துவார். -சி

இயற்கை எம் மூலதனம் — அதை இழந்தால் நம் எதிர்காலம் பாலைவனம்.

# ஈழத்தமிழரின் விடுதலையை இந்தியா புறக்கணிக்க கூடாது

### தமிழக சஞ்சிகை கோரிக்கை

(சென்னை)

ஈழத்தமிழர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எதிரான தனது நிலையை இந்திய அரசு கைவிட வேண்டும் இலங்கைத்தீவில் ஏற்பட்டு வரும் புதிய சூழ்நிலைக்கு ஏற்ப இந்திய அரசு தனது அணுகு முறையை மாற்றிக் கொள்ள வேண்டும். இவ்வாறு தமிழகம் சென்னையிலிருந்து வெளியாகும் 'தமிழர் கண்ணோட்டம்' என்னும் சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சஞ்சிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஈழத்தமிழர்களின் உண்மையான பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளே திகழ்கின்றனர் என்பதையும் ஈழத்தில் புலிகள் தனி ஆட்சி நடத்தி வருகின்றனர் என்ற உண்மை நிலையையும் இந்திய அரசு புறக்கணிக்க கூடாது. எனவே ஈழத்தமிழர்கள் கௌரவமான அமைதியை சாதிப்பதை இந்திய அரசு அனுமதிக்க வேண்டும்.

ஈழ விடுதலைப் போராட்டத்திலுள்ள தமிழகத் தன்னுரிமைக் கோரிக்கைக்கும் அச்சுப்போடுவது தவறானது. ஈழவிடுதலைப் போர் நடந்தாலும் நடக்காவிட்டாலும் தமிழ் தேச தன்னுரிமைக் கோரிக்கை எழுவது நடந்தே தீரும் என்றும் அச்சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது. -ரி

# கென்னத் பெர்ணண்டோ யாழ். நகர் விஜயம்!

(யாழ்ப்பாணம்)

அங்கிலிக்கன் பேராயர் கெனத் பெர்ணண்டோ, அவரது மனைவியார் திருமதி சித்திரா பெர்ணண்டோ, அருட் சகோதரர் சந்திரானி, அருட் தந்தை டொனல்ட் கனகரத்தினு, அருட் தந்தை யோசேப் சர்வானந்தா ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

ஆசிரியர் ஞானப்பொன் ராஜா குருத்துவப் பட்டம் பெறும் வைபவத்தில் கலந்து கொள்வதற்கு விசேடமாக இங்கு வருகை தந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இருக்கும் அங்கிலிக்கன் தேவாலயங்களின் புனர்வாழ்வு பற்றி அறிந்து கொள்வதற்காக வந்துள்ளதாகவும் தெரிவித்தார். -162-59-ரி

# இசைபாடும் திரிகோணம் நாளை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்டத்தினரின் வெளியீடான விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் உருவாக்கிய பாடல் ஒலிப்பதிவு நாடாவான 'இசைபாடும் திரிகோணம்', நாளை வெளியிடப்படுகிறது.

சாவச்சேரி இந்துக்கல்லூரி அரங்கில் நாளை மாலை 6-00 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் திரு. சி. ரவி தலைமையில் நடைபெறும் விழாவில் யாழ். மாவட்டச் சிறப்புத் தளபதி வ. செல்வராசாவும் யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி க. தணிகைச்செல்வியும் மங்கள விளக்கேற்ற திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பி, ரூபன் வரவேற்புரை நிகழ்த்துவார். அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சி கரிகாலன் வெளியீட்டுரை நிகழ்த்த, மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி வி. கருணு ஒலிப்பதிவு நாடாவை வெளியிட திருமலை மாவட்ட சிறப்புத்தளபதி சி. பதுமன் பெற்றுக் கொள்ளுவார்.

ஒலி நாடாவை உருவாக்கிய கலைஞர்களை அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்க மதிப்பீட்டுரைகளை, பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும் திரு. சடா மார்க் கண்டுவும் நிகழ்த்துவார்கள்.

கலை, பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை பதிலுரையையும், கலை, பண்பாட்டுக்கழக துணைப்பொறுப்பாளர் இ. ம. அன்பரசன் நன்றியுரையும் நிகழ்த்துவார்கள். (ரி)

# அரசு உயர் பதவிகளில் தமிழர் நியமிக்கப்படுவதில்லை

(கொழும்பு)

அரச உயர் பதவிகளில் தமிழ் அரச ஊழியர்கள் நியமிக்கப்படுவதில்லையென தற்போதைய அரசாங்கம் மீது தமிழ் அரசியல் வாதிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கல்வியமைச்சு போன்ற அத்தியாவசிய அமைச்சுக்களிலோ அல்லது ஜனதிபதியின் செயலராக அலலது பிரதமரின் செயலராக தமிழர்கள் நியமிக்கப்படுவதில்லை.

இச்செயலானது சிரேஷ்ட தமிழ் அரசாங்க ஊழியர்கள் மத்தியில் பெரும் விரக்தியை தோற்றுவித்துள்ளது.

இது குறித்து உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழ் அரச ஊழியர்களுக்கும் உயர் பதவிகள் வழங்கப்பட வேண்டுமென தமிழ் அரசியல் வாதிகள் அரசாங்கத்தை கேட்டுள்ளனர். க-ரி

# லீவு எடுக்கும் படையினர் மீது தீவிர சோதனை

(கொழும்பு)

லீவில் செல்லும் படையினர் தீவிர பரிசோதனையின் பின்னரே லீவு பெற்றுச் செல்ல அனுமதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

லீவு பெற்றுச் செல்லும் படையினர் தம்முடன் ஆயுதங்களும் எடுத்துச் செல்வது பற்றிதெரியவந்ததை அடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை படையினர் லீவில் நிற்கும் போது அவர்களின் நடவடிக்கைகள் பற்றியும் புலனாய்வு பிரிவினரால் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றது. (ரி)

# பொ. ஐ. முன்னணியில் ரெனிடீமெல் இணைவார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னுள் நிதி அமைச்சரான ரெனி டி மெல் பொதுசன ஐக்கிய முன்னணியில் இணையவுள்ளார் என்று 'கிணிஹற' பத்திரிகை தெரிவித்துள்ளது.

திறந்த பொருளாதாரக் கொள்கையை கடைப்பிடிக்க இருக்கும் பொதுசன முன்னணி அரசாங்கம் ரெனியின் வரவால் மேலும் ஸ்திர நிலையை அடையும்.

பொதுசன முன்னணி அரசாங்கமும் ரெனியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறது என்று 'கிணிஹற' பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. -ம-ரி

### போரினல் ஒரு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முன்னைய அரசாங்கத்தினால் இனப்பிரச்னை இழுத்தடிக்கப்பட்டதுடன் மிக மோசமான நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டது என்றும் ஜனதிபதி தெரிவித்துள்ளார்.

உண்மையான சமாதானம் நாட்டில் நிலவ வேண்டுமானல் வடக்கு கிழக்கு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

நாட்டுமக்களில் 68 சதவீதமானேர் வறுமையில் வாழ்கிறார்கள், ஒரு நிமிடத்தில் யுத்தத்துக்கு செலவிடும் தொகை நாற்பத்தோராயிரம் ரூபா இந்த தொகை மக்களின் ஆரோக்கியத்திற்கோ சுபிட்சத்திற்கோ, கல்விக்கோ அல்லது வீடமைப்புக்கோ பயன்படுத்தப்படவில்லை.

கொடிய யுத்தம் ஒன்றுக்காக இந்த அரும் பெரும் தேசிய வளங்கள் இழக்கப்படுவது நீதியானதா? பல நூற்றுண்டு வரலாற்றுப் பெருமை மிக்க இலங்கையில் எண்ணற்ற அழிவுகளை இந்த யுத்தம் விளைவிதுள்ளது.

தற்போதைய அரசு முன்னெடுத்துள்ள சமாதான முயற்சிகள் மூலம் மோதல் தவிர்ப்பு என்ற கட்டத்தை நாடு இப்பொழுது அடைந்துள்ளது.

இது கடுமையானதும். இன்னல்கள் நிறைந்ததுமான ஒரு காலப்பகுதியாகும். தெளிவானதும், இலகுவானதும், இடர்ப்பாடுகளும், ஆபத்துக்கள் அற்றதுமான ஒரு பாதையைத் தம்மால் காணமுடியாது இருக்கிறது என்றும் அவர் கூறினர்.

மக்களுக்கு உண்மையான சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக யுத்தத்திற்கு முடிவு காணவேண்டியது அவசியம் என்பதை ஜனதிபதி வலியுறுத்தினர்.

நாட்டின் சுதந்திரத்தை வலுவடையச் செய்வதற்கும் அர்த்தமுள்ள தாக்குவதற்கும் என என அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் முக்கிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்து வருகிறது.

நாட்டிலுள்ள பல்வேறு சமூகத்தினரைப் பாதிக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காணுமல் உண்மையான சுதந்திரத்தை எதிர்பார்ககமுடியாது.

நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவருவதற்கான பேராணையைக் கடைப்பிடித்து அனைத்து சமூகத்தினருக்கும் நீதியை நிலைநாட்டப்போவதாகவும் அவர் தெரிவித்தார். ரி

# சமாதானத்தை வலியுறுத்தி தெற்கில் தொடர்ந்து பேரணி

(கொழும்பு)

வடக்கு-கிழககில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியே தெற்கில் சமாதானப் பேரணிகளை மக்கள் நடத்திவருவதாக கொழும்பு பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த சமாதானப் பேரணிகளில் அனைத்து மக்களும் விருப்புடன் கலந்து கொள்வதை அவதானிக்க முடிகிறது எனவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவல் புதிய அரசு பதவியேற்றபின்னர் இது வரை ஐந்திற்கும் மேற்பட்ட சமாதானப் பேரணிகள நடத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் சிலாபத்திலும் சமாதானப் பேரணி ஒன்று இடம்பெற்றது. ரி

### இன்று யாழ். வரும்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வடபகுதிக்கு வருவது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகளைச் சந்தித்து ஆராய்ந்த பின்னர் இன்று பிற்பகல் கொழும்பு திரும்பும் இக்குழுவினர் அங்கு இதுதொடர்பாக கலந்தாலோதித்த பின்னர் கண்காணிப்புப் பணியை ஆரம்பிப்பது தொடர்பாக முடிவு எடுக்கும் எனவும் நம்பப்படுகிறது. —ரி

### படை முகாம்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்பொழுது முகாம்களிலும் சிறைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்யான விபரங்கள் அதற்கு என நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவால் பெறப்பட்டு வருகின்றது.

சிறிலங்கா அரசினல் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழு குறித்த சில முகாமகளுக்கும் சிறைகளுக்கும் செலலவே படையினரால் அனுமதிக்கப் படுகின்றனர்.

இரகசிய முகாம்களிலுள்ள தமது பிள்ளைகளின் விபரங்களை பெற்றுத் தருமாறு தொண்டர் நிறுவனங்கள் மற்றும் அரச அதிகாரிகள் ஊடாக மக்கள் தொடர்ந்தும் கோரி வருகின்றனர். —ரி

### தப்பியோடிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டு பிடிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது. -ம-ரி

### இனப் பிரச்னைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதும் சுட்டிக்காட்டத் தக்கது. -க-ரி

### வர்த்தக ரீதியிலான உடல் உறுப்பு

# மாற்று சிகிச்சைக்கு இந்தியா தடை விதிப்பு

[புதுடில்லி]

வர்த்தக ரீதியான மனித உடல் உறுப்புகள் மாற்று அறுவைச் சிகிச்சைக்கு இந்திய அரசு தடைவிதித்துள்ளது.

மனித உடல் உறுப்புகள் மாற்று அறுவை சிகிச்சை சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட இத்தடை உத்தரவு நேற்று முதல் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

நாளுமன்றம் கடந்த 8 மாதங்களுக்குமுன் நிறைவேற்றியஇச்சட்டத்தின் மூலம் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை இரத்த உறவு உடையவர் என்று உறுதிப் படுத்தப் பட்டவர்களிடம்தான் எடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. க-ரி

### இன்றைய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் இருக்கும் அரசு—புலிகள் நாலாம் கட்டப் பேச்சுக்கள் மிக விரைவில் நடைபெறுமென அரசு தரப்பு நம்புவதாகவும் கூறப்படுகிறது.

அரசு தரப்பு ஏற்கனவே இந்தக் கண்காணிப்புக் குழுவைச் சந்தித்து தமது நிலைப்பாடு குறித்து விளக்கமளித்ததும் தெரிந்ததே. —சி-ரி

### வடபகுதிக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார நிறுவனத்திடம் இருந்து கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

சமாதானம் நிலைநாட்டப்பட்டதும் வடபகுதியில் புனர்வாழ்வுத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த உலக சுகாதார நிறுவனம் திட்டமிட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் போதைப்பொருள் பாவனையைத் தடுத்து நிறுத்தல், குஸ்டரோகத்தை ஒழித்தல் போன்றவற்றில் உலக சுகாதார நிறுவனம் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தார். —க-ரி

# கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபை புதிய தலைவர்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை புதிய தலைவராக பிரபல வர்த்தகர் அனுபுஞ்சிகவே நேற்று போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் மென்பான நிறுவனமொன்றின் முகாமைத்துவ பணிப்பாளராக கடமையாற்றிவருகிறார்.

முன்னுள் எதிர்க்கட்சி தலைவர் திரு. காமினி திஸாநாயக்காவின் இடத்திற்கே இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-